
ஜீன் '84

40

50 காசு

மாத இதழ்

# சுட்டி



<u>நண்பர்</u>: என்னண்ணே, உங்களுக்கு சாதாரண ஜூரம்தானே! எதுக்கு இவ்வளவு பேர் கூடி இருக்காங்க?

<u>எம்.எல்.ஏ</u>: அட, நீ ஒன்னுய்யா! நான் சாக மாட்டேனா– இடைத் தேர்தல் வராதா– தேர்தல் வைபவத்தை வெச்சு சில்லறை பண்ணலாமேன்னு ஒரு கூட்டம் கூடி இருக்குதய்யா!

FREE E-BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,



## "சமூகமே உனக்கு வெட்கமில்லை?"

இவர்கள்
நடைபாதையோரத்து
நடைபிணங்கள்...

●

தெருவீதிகளையே
அரண்மனைகளாக்கிக்
கொண்ட
இந்நாட்டு மன்னர்களின்
இளவரசிகள்...

●

மண்ணுலகில் உயிர் வாழும்
மனித கூட்டத்திற்கு
வசிக்க வீடும்
புசிக்க உணவும் கூட
தரமுடியாமல்
தவிக்கிற
ஏ! தரங்கெட்ட சமுதாயமே!

உனக்கு வெட்கமாயில்லை

—பம்மல் மணிமொழி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# இந்தியா நேற்று இன்று நாளை 9

போராட்டங்களின் முறையை கட்சிகளோ, தத்துவங்களோ, தலைவர்களோ தீர்மானிப்பது இல்லை. அது அனுபவத்தில் மக்களிடையே முகிழ்க்கின்றது. இந்த அனுபவம் ஆளும் தரப்பின் எதிர் நடவடிக்கைகளில் இருந்து உருவாகுகின்றது.

போராட்டங்கள் அவற்றின் ஆரம்ப (கரு) நிலையில் முழுதும் பிரச்சாரத் தன்மையுடையனவாகவே உள்ளன. வளர, வளர ஆளும் தரப்பிற்கு முட்டுக்கட்டையாகவும், இறுதியில் முற்றுகையாகவும் மாறுகிறது. போராட்டங்களின் இவ்வளர்ச்சிக் காலக் கட்டத்திலேயே அவற்றின் உள்ளடங்கியுள்ள பிரச்சாரத் தன்மையின் அளவு வேறுபடுகிறது.

இது சாத்வீகப் போராட்டம், ஆயுதப் போராட்டம் இரண்டுக்குமே பொதுவானது.

போராட்டத்தில் பிரச்சாரத்தன்மை இல்லாவிட்டால் அவை சமூகத்தன்மை இல்லாமல் குற்றங்களாகி விடும். பிரச்சாரத்தன்மை இருப்பதால் மட்டுமே இக்குற்றங்கள் நியாயங்களாகின்றன. இப்பிரச்சாரம் சமூக அவசியமுடையதாக இருக்க வேண்டும். இதுவே வெறும் பிரச்சாரத்தை போராட்டத்தன்மையாக்குகிறது.

பார்லிமென்ட் முறையில் பலம் பெற முடியாததால், வேறு நடைமுறைக்கு தாவுவது 'சீச்சி இந்தப்பழம் புளிக்கும்' என நரி சொன்ன கதைக்கு ஒப்பாகும்.

தேர்தல் முறைகள் போலியானதால் தேர்ந்து எடுக்கப் பட்டவர் தான் போலியானவராக இருப்பார். மக்கள் அல்ல. ஜார் முதலான அப்பட்டமான கொடுங்கோன்மைக்கு உள்ளும் மக்களை ஒன்று சேர்க்க முடிந்தது என்றால், ஜார் ஆட்சியில் இல்லாத வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் பொதுவுடமை வாதிகள் செயலற்றுக் கிடப்பதற்குக் காரணம் அவர்களின் நடைமுறைகளே.

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஆயுதங்கள் மட்டும்தான் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்றால் வியட்நாமில் அமெரிக்கா தான் வெற்றி பெற்றிருக்க முடியும். ஆனால் நிலைமை என்ன?

இந்தியாவில் சில மாநிலங்களில் கம்யூனிஸ்ட் அமைச்சரவை புறக்கணிக்கப்பட்டதும், சிலியில் ஆலண்டேயின் அரசு கவிழ்க்கப்பட்டதும் சரியான ஆதாரங்களாகி விடாது. அவர்கள் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கட்டும்.

எங்குமே ஆயுதப் போராட்டம் எவ்வளவு தோல்விகளைச் சந்தித்து இருக்கிறது? சில தலைமுறைகள் கடந்தன என்பதற்காக ஆயுதங்களைத் தூக்கி எறிந்து விடவில்லையே. அந்த பொறுமையையும், நிதானத்தையும் பார்லிமென்ட் முறையில் கடைபிடித்தால் என்ன?

ஒரு இயக்கம் ஆரம்பித்த உடனேயே வெற்றி பெற வேண்டும் என்பதில்லை. ஆட்சியைப் பிடித்து விடுவதால் மட்டும் வெற்றியடைந்து விடுவதில்லை. நாஜிகள் ஜெர்மனியில் ஆட்சியமைத்த பிறகே அவர்களின் தோல்வி நிர்ணயிக்கப்பட்டது. இயக்கமோ போராட்டங்களோ நமது தலைமுறையோடு முடிந்து விடுவதில்லை. அவற்றில் நாம் சில கண்ணிகளே.

எனவே போராட்டத்தைப் பற்றிய "மிகப் பழைய மனப்பான்மை"யானது தத்துவ வறட்சியின் நான்காவது மைல் கல்லாகும்.

**சுருக்கமாக :**

இதுவரை சொன்னவற்றை பின்வருமாறு சுருக்கலாம். 1. உலக அளவில் பொதுவுடமைத் தத்துவம் ஸ்தம்பித்து நிற்கிறது; பிளவுபட்டு கிடக்கிறது. 2. பொதுவுடமை அரசுகளே எதிர்விளைவுகளைத் தந்துள்ளன. 3. இம்முட்டுக் கட்டையை நீக்க எந்தப்பிரிவுகளுமே முயலவில்லை. 4. பொதுவுடமை அமைப்புக்கு மாறுவதற்கான மூன்றாவது பாதையைக் கண்டு கொள்ளவில்லை.

இவற்றின் விளைவாக தத்துவப் போக்கில் தவறுகள் தோன்றுகின்றன. இவைகளுக்குத் தீர்வு காணாமல் இந்தியா ஜனநாயக அமைப்பில் இருப்பதோ, கம்யூனிஸ்ட் அமைப்புக்கு மாறுவதோ வெறும் பெயர் மாற்றமாகத்தான் இருக்கும். உள்ளடக்கத்தில் மாறுபாடு இருக்காது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நமக்கு பேரீச்சம் பழ மருத்துவம்

நம் நாட்டில் பேரீச்ச மரங்கள் பயிராவதில்லை. சிற்றீச்ச மரங்களே இங்கு உண்டு. இங்கு கிடைக்கும் பேரீச்சம் பழங்கள் அனைத்தும் மேற்கு ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுவதாகும். இப்பழம் வற்றலாகவோ, பதம் செய்யப்பட்டோ, நமக்கு அனுப்பப்படுகிறது.

✷ சிறுவர் முதல் பெரியோர் வரை அன்றாட உணவில் உண்டபின் ஒரு வேளையாவது குறைந்தது 2 அல்லது 3 பேரீச்சம் ப[illegible] சாப்பிட்டால் :- புதிய இரத்தம் உண்[illegible] ள தோல் வழவழப்பாகும். கண்[illegible] ந்தமான [illegible] றுகள் வராது; இருந்தாலும் குணமாகும்; [illegible] ம்புகளுக்கு முறுக்கு ஏறும். எந்த வ[illegible] அணுகாது. பல் சம்மந்த ம[illegible] ச[illegible]

✷ பேரீச்சம் ப[illegible]தில் உள்ள சத்துக்களின் வ[illegible]—
(2½ ரூபாய் எடையில்)

வைட[illegible] சுண்ணாம்புச்சத்து—
[illegible] இரும்புச்சத்து—
[illegible] உணவு அளவு—80 காலரி

C—இல்லை

✷ தாது விருத்தியும், போக சக்தியும் குறையுடையவர்கள். பேரீச்சம் பழத்தைத் தேனில் ஊறவைத்து நாள் தோறும் சில துண்டுகளைச் சாப்பிட்டு பால் பருகி வர நல்ல குணம் தெரியும்.

✷ இருமல், கபம் போன்ற கோளாறுகளுக்குப் பேரீச்சம் பழத்தைப் பாலில் வேக வைத்துத் தந்தால் பலனுண்டு.

(அடுத்து : மாதுளம்பழ மருத்துவம்)

—சித்தன்.

இந்த நிலையில் கம்யூனிஸ்ட் அமைப்புக்கு மாறுவது என்பது நல்ல சர்வாதிகாரத்தை பற்றிய கனவே தவிர வேறு இல்லை.

இதுவே தத்துவ வறட்சியின் மொத்தப் பரப்பாகும்.

-தொடரும்-

FREE E- BOOKS , www.thamizham.net.,

# மே. வங்கத்தில்



படித்த மற்றும் படிக்காத வேலையில்லாத ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கோடிக்கணக்கில் பணம் முதலீடு செய்து 11 தொழிற்சாலைகளில் லைசன்ஸ் இல்லாமல் சட்ட விரோதமாக துப்பாக்கி மற்றும் பயங்கர ஆயுதங்கள் உற்பத்தி செய்கின்றனர். இத்தொழிலில் ஈடுபடுபவர்க்கு 7 ஆண்டு கடுங்காவல் என்ற சட்டத்தை இவர்கள் சட்டை செய்யவில்லை. மேலும் நக்சல்பாரி இயக்கம் சரியான தலைமையின்றி சீரழிந்து விட்டதால் முன்னாள் நக்சலைட் பயங்கரவாதிகளுக்கு இத்தொழில் புகலிடம் அளித்துள்ளது. திபஸ் கங்கூலி போலீசாரிடம் சிக்கிய ஆயுதம் மருந்து பற்றி அளித்துள்ள புள்ளி விபரங்கள் இதோ :

| ஆண்டு | நவீன ஆயுதங்கள் | திருத்திய அமைப்புடைய ஆயுதங்கள் | வெடிமருந்து |
|---|---|---|---|
| 1980 | 139 | 676 | 13,677 |
| 1981 | 238 | 832 | 2,810 |
| 1982 | 169 | 778 | 2,904 |
| 1983 | 100 | 770 | 2,689 |

இவர்களைப்பற்றி துப்பு கொடுப்போருக்கு வருடத்துக்கு ரூ 1 இலட்சத்துக்கு மேல் அரசு செலவு செய்கிறது சமீப ஆண்டுகளில் மின்வெட்டு காரணமாக பல.சிறுதொழிலதிபர்கள் தொழிலகங்களை இழுத்து மூடிவிட்டு இதில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

தகவல் : செல்வன், ஆதாரம் : "The week" Jan 8,10/4,1984

FREE E- BOOKS , www.thamizham.net.,

## பொய்களுக்கு பூச்சூட்டும் B. B. C.
## BRITISH FRAUD CASTING CORPORATION ?

"ஒரு காலத்தில் B. B. C. வானொலிச் செய்தியை முற்றிலும் உண்மையானது என்று மக்கள் நம்பினர். ஆனால் அந்த நம்பிக்கை வேகமாக மறைந்து வருகின்றது. செய்திகளைத் திருத்தியும் திரித்தும் கூறுவது B. B. C.யின் அன்றாட பழக்கமாகிவிட்டது''.

இப்படிச் சொல்லியிருப்பவர் இங்கிலாந்தின் அரசியல் வாதியும், முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான டோனி-பீன். கார்டியன் பத்திரிகை 7-11-83 இதழில் இதனை வெளியிட்டுள்ளது

'கிரனடா மீது அமெரிக்காவின் தாக்குதலை எதிர்த்து லண்டனில் சுமார் ஐயாயிரம் பேர் போராட்டம் நடத்தினர். அந்த ஊர்வலத்தில் லண்டனில் உள்ள கிரனடா ஹை கமிஷனர் பேசினார்.

அப்போது அவர் தாக்குதலுக்குப் பிறகு கிரனடாவில் ஏற்பட்ட மக்கள் சேதத்தைப் பற்றி, புள்ளி விபரத்தையும் கொடுத்திருந்தார். முன்னாள் பிரிட்டிஷ் அமைச்சர்கள் இருவர் கூட்டத்தை ஆதரித்து செய்திகளை அனுப்பியிருந்தார்கள். அவை கூட்டத்தில் படிக்கப்பட்டன. வீடு திரும்பிய டோனிபீன் இந்நிகழ்ச்சியினைக் குறித்து ஒரு கட்டுரை தயார் செய்தார். அதில் ஹை கமிஷனர் அளித்த புள்ளி விபரங்களையும் இடம் பெறச் செய்தார். தாம் குறித்த அந்த புள்ளி விபரம் சரிதானா என்று ஒத்துப்பார்க்க. B. B. C. வானொலியைத்திறந்தார். ஆனால் அந்தோ! அதில் அந்த எதிர்ப்பு ஊர்வலத்தின் செய்தியே இடம் பெறவில்லை. மாறாக அமெரிக்கப் படையினருடன் கிரனடா மக்கள் எவ்வாறு நேசகரமாக இணைந்து விட்டார்கள் என்ற செய்தியைத் தான் வானொலி தந்தது. ஜெர்மனியில் மூன்று பேர் ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் பிலிப்பைனில் ஒரு சிறு ஆர்ப்பாட்டம் நடந்ததாகவும் ரேடியோ கூறியது. ஆனால் லண்டனில் தன் செயலகத்திலிருந்து அரைமைல் தூரத்தில் ஐயாயிரம் பேர் கலந்து கொண்ட எதிர்ப்பு ஊர்வலச் செய்தியை இருட்டடிப்பு செய்து விட்டது.

—நன்றி: சமரசம்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# “தமிழ் சாகும்”

— செல்வி. இரா. நிர்மலா, B.Sc M.A., (M. Phil), Cert. in Marathi,
ஆய்வாளர், தமிழ் மொழித் துறை,

நான் சென்ற மாதம் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்திருந்த மராத்தி மொழிச் சான்றிதழ் வகுப்பிற்கான பயிற்சிக் கட்டணத்திற்கு வரைவோலை அனுப்புவதற்காக இந்திய மாநில வங்கி, ஜவஹர் நகர் கிளைக்குச் சென்றிருந்தேன். அங்கு வரைவோலைக்கான விண்ணப்பம் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிடப் பட்டிருந்தது கண்டு மகிழ்ந்து, தமிழிலேயே பூர்த்தி செய்தேன். வங்கியின் எழுத்தர் என்னை அழைத்து, நான் எழுதியவற்றின் பக்கத்தில் ஆங்கிலத்தில் மீண்டும் எழுதச் சொன்னார். ஆங்கிலத்தில் தான் எழுத வேண்டும் என்றால் தமிழில் ஏன் அச்சடிக்க வேண்டும் என்று கேட்டேன். “தமிழில் எழுதும் வழக்கம் இல்லை. தமிழில் எழுதினால் சிக்கல் ஏற்படும்” என்றார். டில்லிக்கா வரைவோலை அனுப்புகின்றேன்? தஞ்சைக்குத் தானே! தஞ்சையில் பணிபுரிபவருக்குத் தமிழ் தெரியாதா? என்று திகைத்தேன்.

எல்லாவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்துவிட்டு வரைவோலையைப் பெற்றுக் கொண்டேன், பதிவுத் தபாலில் அனுப்புவதற்காகத் தபால் நிலையம் சென்றேன். பதிவுத் தபால் விண்ணப்பமும் தமிழில் அச்சிடப்பட்டிருந்ததால் முன்புபோல் தமிழிலேயே பூர்த்தி செய்தேன். அதற்குரிய பற்றுச் சீட்டை அளித்த பெண், ஆங்கிலத்தில் பலதவறுகளுடன் எழுதி என்னிடம் அளித்தார். தமிழில் எழுதினால் விரல்கள் வெந்துவிடுமோ? தமிழ் தெரியாது எனக் காட்டிக் கொள்வதும், தெரியாவிட்டாலும் ஆங்கிலத்தில் தவறுதலாக எழுதுவதும் மதிப்பானவை என்று நினைக்கும் இப்படிப்பட்ட ஊழியர்களால் தமிழ் வளருமா? தபால், வங்கி முதலிய துறைகளில் கூட தமிழை நுழைய விடாத நாம், தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யப் போகிறோமா???

FREE E- BOOKS , www.thamizham.net.,

# டில்லி பெண்களுக்கு இருக்கும் ரோஷம் தமிழ் நாட்டுப் பெண்களுக்கு வருமா?

டெல்லியில் திரையிடப்படும் தமிழ், தெலுங்கு, மலையாளப் படங்கள் ஒரிஜினல் டைட்டிலில் அல்லாமல் ஆபாசமான டைட்டில்களில் வெளிவருவதைக் கண்டித்து 6 மாதங்களுக்கு முன்பு புதுடெல்லியில் பெண்கள் போராட்டம் நடத்தினார்கள்,

'சிலா' என்ற மலையாளப் படம் 'வெறிபிடித்த மங்கை! என்ற டைட்டிலிலும் 'ஆடு தண்டே அதுசா' என்ற தெலுங்கு படம் 'கற்பழிப்பு கொடுமைகள்' என்ற தலைப்பிலும் 'உணர்ச்சிகள்' என்ற தமிழ்ப் படம் 'செக்ஸ் பையன்' என்ற டைட்டிலிலும் ஓடிக்கொண்டிருந்த பொழுது பெண்கள் தியேட்டர் வாசலில் ஆர்ப்பாட்டம் செய்து ஒரிஜினல் டைட்டிலில் ஓட வைத்தார்கள்!

பத்திரிகைகளும் ஒரிஜினல் டைட்டில் தந்தால் தான் விளம்பரம் தருவோம் என்று சொல்லி விட்டன!

சென்னையில் வரும் சில நல்ல படங்கள்கூட ஆபாசமான தலைப்புகளைத் தாங்கி வருகின்றன.

அப்படிப்பட்ட தலைப்புகள் பெண்களை மிகவும் இழிவு படுத்தும் வகையிலும் இருக்கின்றன.

நல்ல தலைப்புகளைக் கொண்டு வெளியாகும் சில படங்கள் ஆபாசமான காட்சிகளைக் கொண்டு இருக்கின்றன. உதாரணம், சமீபத்தில் திரைக்கு வந்து மிகவும் பாப்புலராகி ஓடும் 'முந்தானை முடிச்சு'.

ஆனால் படத்தில் முருங்கைக்காய் சீன், தவக்களை டான்ஸ் எல்லாம் ஒரே ஆபாசம்! டெல்லி பெண்களுக்கு உள்ள ரோஷம் தமிழ் நாட்டில் வாழும் பெண்களுக்கும் இருக்கவேண்டும்!

நன்றி —மாசிலாபணிக்குரல்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## சிறு கதை

# பரிசு ரூ.2 கோடி

அந்த ஊரில் மாசிலாமணியைப் பற்றி தவறாகச் சொல்லி விட்டு நீங்கள் திரும்ப முடியாது. எதாவது ஊரில் தகராரா? மாசிலாமணி தான் தீர்ப்பார். மாசிலாமணியிடம் படித்தவனா? கண்ணை மூடிக்கொண்டு பக்கத்தூரில் வேலை கொடுப்பார்கள்.

அவ்வளவு பெயர் பெற்றவர் மாசிலாமணி. அந்த ஊர் ஆசிரியர். கண்ணியம், ஒழுககம், நேர்மை மூன்றின் உறைவிடமாக இருந்த அவரிடம் ஒரு பழக்கம் உண்டு. அடிக்கடி லாட்டரி சீட்டு வாங்குவார். காரணம், அவர் குடும்பத்தின் ஏழ்மை தான். காசில்லாததால் மூத்தப்பெண்ணின் திருமணம் கூட தள்ளிக் கொண்டேயிருந்தது.

அன்றுதான் அந்த 2 கோடி ரூபாய் பரிசின் முடிவு வெளியாயிருந்தது. பேப்பரில் வந்திருந்த கெஸட் முடிவுடன் ஒப்பிட்டுப் பார்க்கச் சீட்டையும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தார்.

முதல் பரிசின் நம்பரை, நமக்கெங்கே கிடைக்கப் போகிறது என்று நம்பிக்கையில்லாமலே பார்க்கலானார்.

எக்ஸ் எக்ஸ் என்று தொடங்கிய எண்ணையும் தன் சீட்டையும் பார்த்தவர் நம்பரைப் பார்த்தார். நம்பர் 244882 என்றது. தன் சீட்டின் முதலிரண்டு என்னைப் பார்க்க 24 என்றது. அடுத்த என்னும் ஒத்து வர 244 தாண்டி படபடப்புடன் அடுத்த எண்ணையும் பார்த்தார் 8. மூச்சைப்பிடித்துக் கொண்டு அடுத்த எண்ணையும் பார்க்க அதுவும் 8. மகிழ்ச்சியும், படபடப்பும், இனந்தெரியா உணர்வுகளும் உந்த கடைசி நம்பரைப் பார்க்க அதிர்ச்சியடைந்தார்.

அவரிடம் 244884 இருக்க, பரிசு 244882ற்கு இருக்க அப்படியே வெறித்து பார்த்தவர்.

'சே! ரெண்டே ரெண்டு டிக்கட்!'

மறுநாள் ஊரார் அவரை 'ரெண்டுய்யா, ரெண்டே ரெண்டுதான்யா' என்று சொல்லியவாறே பைத்தியமாக திரியும் அவரை அனுதாபத்துடனும், கேலியுடனும் பார்த்துச் சிரித்தனர்.

—ஈஸ்வரன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# வேலை இல்லாத் திண்டாட்டம் குறைய!..



வேலையில்லாத் திண்டாட்டம் இன்று அதிகம் புகழ் பெற்றுள்ள தேசிய குறைபாடு. செய்ய வேண்டிய வேலைகளை சரியாகபிரித்துக் கொடுக்காமையும் வேலைவாய்ப்புக்கள் முடக்கப்பட்டு இருப்பதுமே நடைமுறை உண்மை. இருக்கின்ற வேலை வாய்ப்புக்களைப் புனரமைத்தாலே வேலையில்லாத எத்தனையோ பேர்களுக்கு வேலை கிடைக்குமே!

ஒருவருக்குக் கூட வேலையில்லாமல் பல குடும்பங்களில் வறுமை தாண்டவமாட சில குடும்பங்களில் எல்லோருமே வேலைக்குச் சென்று விடுகின்றனர். எல்லோரும் குறைந்தபட்சம் அடிப்படை வசதிகளுடன் வாழும் நிலை ஏற்படும் வரையில் முதலில் ஒரு குடும்பத்தில் ஒருவருககுத் தான் வேலை என்பது ஏற்பட வேண்டும். கணவன், மனைவி இருவரில் அதிக ஊழியம் பெறக்கூடிய தகுதி, பொறுப்பு, ஒழுக்கம் இவற்றின் அடிப்படையில் ஒருவருக்கு மட்டுமே வேலை தரப்பட வேண்டும். பொழுது போக்கிற்காக, கல்யாண சந்தையில் சீக்கிரம் விலைபோக என்று வேலை தேடும் மணமாகாத பெண்களுக்கும் தவணை முறையில் நகை, புடவை, ஆடம்பரப் பொருட்களை வாங்குவதற்காக வேலைக்குச் செல்லும் மணமான பெண்களுக்கும் வேலை வாய்ப்பு மறுக்கப்பட வேண்டும். அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவு வருமானம் பெறும் பொறுப்புள்ள ஒரு ஆணை மணந்து குடும்பம் நடத்தும் பெண்ணுககு ஒரு வேலை கொடுப்பதைவிட வாழ்வில் அடியெடுத்து வைக்கும் தகுதி வாய்ந்த வேலையற்ற இளைஞனுக்கு அவ் வேலையைக் கொடுப்பது மற்றொரு குடும்பத்தை வாழ வைக்குமல்லவா?

FREE E- BOOKS , www.thamizham.net.,

அடுத்து ஒருவரே பல இடங்களில் வேலை செய்வதும் வேலை வாய்ப்புக்களை முடக்குகின்றது. காலைக் கல்லூரி ஆசிரியர்களே மாலைக் கல்லூரியிலும் வேலை செய்வது, அரசு நிறுவன ஊழியர்களே மாலையில் தனியார் நிறுவனங்களிலும் வேலை செய்வது, வங்கிகள், தொழிற்சாலைகளில் ஏற்கனவே வேலை செய்வோருக்கே ஓவர்டைம் கொடுப்பதை நிறுத்திவிட்டு தகுதி பெற்றும் வேலையில்லாதவர்களுக்கு அவ்வேலைகளைக் கொடுக்கக் கூடாதா? எப்பாடுபட்டாவது வரதட்சணை கொடுத்து நகை போட்டு பெண்ணை மணமுடித்துக் கொடுத்து விடுவது விலைவாசி எவ்வளவு உயர்ந்தாலும், அதற்கேற்ப அதிகமாக உழைத்து செலவைச் சரிகட்டி விடுவது, கடன் வாங்கியாவது காரியத்தை முடித்து விட்டுப் பின் கடனைக் கட்டிக் கொள்வது என்று பணிந்தே பழகி விட்டால் நாள் முழுவதும் ஓய்வின்றி உழைத்தாலும் பற்றாக்குறை தான் நிலவும். வேலை அனுபவம் பெற்றவர்கள் என்பதற்காக வல்லவர்களை மட்டுமே வேலைக்கு அமர்த்தினால் புதிதாகப் படித்து முடித்து வருபவர்கள் எப்படி அனுபவம் பெறுவது?

நகரத்தில் வேலை செய்தால்தான் மதிப்பு அதுவும் இன்ன வேலைகள் செய்தால் தான் மதிப்பு என்ற போலிக் கௌரவம் வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்க்கிறது. உதாரணமாகக் கரும்பலகை, எழுதுகோல்-சரியான வகுப்பறை, போதுமான ஆசிரியர்கள் இல்லாத கிராமப் பள்ளிகளைப் பற்றிக் கேள்வியுறும் வேலையற்ற பட்டதாரி இளைஞர்கள் ஒன்று சேர்ந்து இப்பள்ளிகளை சீர்திருத்தி தாமும் பிறரும் பயனடைவது பற்றி சிந்திக்கக் கூடாதா? கிராமச் சூழலில் எடுக்கப்பட்ட திரைப்படங்கள், பாடல்கள், நாவல்களை ரசிக்கத் தெரிந்தவர்கள் நிஜ வாழ்க்கையில் அவற்றுடன் அந்நியமாகிப் போவதேன்?

—நிலா

---

✳ டெல்லியில் மட்டும் ஏறக்குறைய 650 பேர் ஆண்டு தோறும் சாலை விபத்துக்களில் இறக்கிறார்கள். இந்தியாவின் தலை நகரம் இத்தகைய விபத்துக்களிலும் தலையாய நகரமாக இருக்கிறது!

—தகவல்: பானுமணாளன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# எங்கு சென்றாலும் சுலபமாய் வேலை கிடைக்கும்

S.S.L C. படித்திருந்தால் கூடப்போதுமானது

# ACCOUNTANCY

பயிலுக! கணக்கு எழுதும் முறை தெரிந்திருந்தால் யார் சிபாரிசும் தேவையில்லை! சுலபமாய் வேலை கிடைத்துவிடும். ஏனெனில், எங்குமே கணக்கர்கள் தேவையாயிருக்கிறது. எட்டே மாதப் படிப்பு தான். தபால் மூலம் பயிற்சியும் பெற்று அத்தாட்சியும் பெறலாம். மாதந்தோறும் ரூ 20 அனுப்பினாலே போதும். முழு விபரம் பெற 30 பைசா ஸ்டாம்பு அனுப்புக.

## 'தங்கராஜ் கல்வி நிலையம்'

45, ஆற்காட் ரோடு, சென்னை-600 024.

# S S L C. & H.S.C. (+2)

(தமிழ்நாடு அரசு பொதுத் தேர்வுகள்)

வீட்டிலிருந்தே படித்து பாஸாகலாம்

16 வயது நிரம்பியவர்கள் 8வது தேறியிருந்தால் S. S. L. C. பிரைவேட்டாக எழுதலாம்.

18 வயது நிரம்பியவர்கள் 10வது (S.S.L.C) தேறியிருந்தால் H.S C (+2) பிரைவேட்டாக எழுதலாம்.

பாடங்கள் அனைத்தும் தபால் மூலம் அனுப்பி வைக்கின்றோம். பயிற்சிக் கட்டணம் மாதந்தோறும் M.O மூலம் அனுப்பினால் போதும். முழு விபரம் பெற 30 பைசா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

## தங்கராஜ் கல்வி நிலையம்

45, ஆற்காட் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-600 024.


FREE E- BOOKS , www.thamizham.net.,



அழகும் கம்பீரமும் பொருந்திய அந்த மாது நியூயார்க் துறைமுகத்தில் சுமார் 2 கோடிப் பேர்கள் வந்து குடியேற வரவேற்றவள். அவள் தான் சிலை வடிவில் உயர்ந்து நிற்கும் சீமாட்டி—சுதந்திர தேவி.

அவளுக்கு வருகிற 1986-ஆம் ஆண்டு ஜூலை 4-ஆம் தேதி 100 வயதாகிறது. அவளுடைய நூறாவது ஆண்டு நிறைவை ஒட்டி சிலையைப் புதுப்பிக்கும் பணிக்காகவும் பெரிய விழா ஒன்று எடுக்கும் முயற்சியையும் மேற்கொண்டு ஏராளமாக நிதி திரட்டி வருகிறார்கள்.

# சுதந்திர தேவி

இவ்விடுதலைச்சிலை அமெரிக்காவுக்கு 1886-இல் பிரான்ஸ் நாடு நன்கொடையாக வழங்கியதாகும். இதனை அமைத்த சிற்பி: ஃபிரடாரிக் ஆகஸ்ட் பார்தோல்டி. உதவியாளர்: பொறியியல் வல்லுநர் அலக்சாண்டர் கஸ்ட்டேவ் ஐஃபல். இச்சிலை 200 டன் எடையுள்ள செப்புத் தகடுகளால் ஆனவை. உள்ளுக்குள் இரும்புச் சட்டங்கள் உறுதியளிக்கின்றன. இச்சிலையை வடிக்க செலவான தொகை சுமார் 4 லட்சம் டாலர்கள். இச்சிலையை நிறுத்துவதற்கு 30 மீட்டர் உயரமுள்ள பீடம் அமைக்கப்பட்டது. செலவு சுமார் 2,70,000 டாலர்கள். தற்போதுள்ள மாடிப்படிகள் 171. இவற்றில் ஏறி சிலையின் முடிவரையில் செல்லலாம். (1916 முதலே தீபச் சுடர் ஏந்தி இருக்கும் ஓங்கிய கையில் யாரையும் ஏற விடுவதில்லை.) சரி; இந்தச் சிலை பிரான்ஸ் நாட்டிலிருந்து நியூயார்க் துறைமுகம் வந்ததெப்படி? சிலையைப் பலப்பல பகுதிகளாகப் பிரித்து 85 பெரிய பெரிய மரப் பெட்டிகளில் அடைத்து ரயில் மூலமும் கப்பல் மூலமும் ஏற்றி நியூயார்க் துறைமுகத்துக்கு அனுப்பி வைத்தனர். சிலையின் உயரம் (கால் முதல் கைச் சுடர் வரையில்) 50 மீட்டர். சுமார் 150 அடிக்கு மேல்.

—"செங்கீர்"

FREE E- BOOKS , www.thamizham.net.,

# குமுதமும் கணிதமும்

அன்புள்ள ஆசிரியருக்கு,

பல இலட்சம் பிரதிகளை வாரம் ஒன்றுக்கு விற்பனை செய்து கொள்ளை இலாபம் அடிக்கும் 'குமுதம்' சில நூறு பிரதிகளே மாதம் ஒன்றுக்கு விற்பனையாகும் உயர்தரமான கடலூரிலிருந்து வரும் 'தென்மொழி' இதழில் சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட 'திராவிடர் பெர்க்' எனும் பேரறிஞரின் கணிதப் புதுமையை ஒரு வாரம் வெளியிட்டு, அதையும் சினிமா நடிகையின் பெயரிலே வெளியிடும் கேவலமான நிலை கண்டு நெஞ்சு பொறுக்காமல் இதை எழுதுகிறேன்.

திருட்டு (புரட்டு) கணித பேதை சுஜாதா தேவி அவர்கள் பெயரில் வெளியிட்டு தனது Circulation அதிகம் செய்ய வேண்டிய நிலையா? இனி நாளை இப்பத்திரிக்கைத் திருடர்கள் திருக்குறளைக் கூட யாராவது பெயரிலே வெளியிடலாம்.

—ப. முருகசாமி, பெருந்துறை.

## ஒரு வழிப் பயணிகள்!

பள்ளிச் சிறுவர்கள்
சத்துணவைச் சாப்பிடுகிறார்
கள்...
சத்துணவு
அரசாங்கத்தைச் சாப்பிடு
கிறது...
அரசாங்கம்
மக்களைச்
சாப்பிடுகிறது...
மக்கள்?
ஓ!!!
அவர்கள்தான்
ஒரு வழிப்பயணிகளா
யிற்றே!

—டி. கே. ராமமூர்த்தி


யாரைத்தான் நம்புவதோ
பேதை உள்ளம்... அம்மம்மா
பூமியிலே யாவும் வஞ்சம்



37999, 864393

# கட்டிடத் தொழிலாளர் - சில கவனங்கள்



கட்டிட வேலை செய்பவர்கள் இறந்தால் அவர்களுக்கு ரூ. 10000-மோ அல்லது மதிப்பீட்டுத் தொகையோ வழங்குவதாக தமிழக அரசு அறிவித்ததை சமீபத்தில் குமரி அனந்தனின் குறு நிலக் குழு பாராட்டியிருக்கிறது. அவர்கள் அறிவித்ததும் தவறில்லை. இவர்கள் பாராட்டியதிலும் குறையில்லை. ஆனால் செய்வதை முன் கூட்டிய பாதுகாப்புகளில் கவனம் செலுத்தினால் என்ன என்பதே நமது வினா.

கட்டிட விபத்துக்கள் ஏற்படக் காரணம் என்ன என்பதை நாம் நன்றாக அறிவோம். கான்டிராக்ட் காரர்களே· அதற்கு முழுப்பொறுப்பு என்பதும் நாம் அறிந்ததே! பத்துக்கு ஒன்பது விகிதத்தில் மணலைக் கலந்தால் பலன் என்ன? இந்த அடிப்படையைக் கண்டுபிடித்து சரி செய்தால் என்ன?

கட்டிட வேலை நடைபெறும் மனைக் கட்டுகளில் விபத்துகளைத் தவிர்ப்பதற்கு சிங்கப்பூர் நிறுவனம் ஒன்று கண்டுபிடித்த முறையை சிங்கப்பூர் அரசே ஏற்றுப் பரவலாக்கி உள்ளது. அதன்படி ஒவ்வொரு உறுப்பினருக்கும் பாதுகாப்புத் தொப்பி வழங்கப்படுகிறது. பணி நேரத்தில் அதனை அணிந்து கொள்ளாத உறுப்பினருக்கு அபராதம் விதிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கான்டிராக்டரும் அதன்படி தனது கீழ் உள்ளவர்கள் பாதுகாப்புத் தொப்பி அணிந்துள்ளனரா எனக் கவனிக்க வேண்டும். அதன்படி செயல்படாதவர் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு முன்னுரிமைத் தகுதிகளில் இருந்தும் விலக்கப்படுகின்றனர் (அணியும் தொப்பிகளுக்கு எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன).

இதன் பிறகு உயிர்ச் சேதங்கள் 1000க்கு 0.42 என்ற விழுக்காடு அளவில் 49 சாவுகளே ஏற்பட்டுள்ளன என சிங்கை அரசு தெரிவிக்கிறது. இந்த வகையிலான ஒரு திருத்தத்தை அரசுப் பரிந்துரைத்து அதன் பிறகு உயிர் சேதம் ஏற்படுமானால் நஷ்ட ஈடுகள் வழங்கலாமே!

FREE E- BOOKS , www.thamizham.net.,


# சுட்டியார் பதில்

★ தமிழக அரசியல் வாதிகளின் மிகப்பெரிய சாதனை என்று எதைக் கூறலாம்?
எம். வடுகநாதன், வேதாரண்யம்

அரசியல்வாதிகள் சாதனைகளை எங்கே சாதிக்கிறார்கள்? வேதனைகளைத் தானே விதைக்கிறார்கள்.

★ ஒரு 'நாடு' என்றால் அது எப்படி இருக்கவேண்டும்?
மு. அப்பாவு, அனிச்சம்பாளையம்

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் இவை யாவும் ஒவ்வொரு மனிதனுக்கும் தரக்கூடிய தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.



★ முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் எப்படி உள்ளது?

மாணவக் குழந்தைகளை விட அதை நிர்வகிக்கின்றவர்களின் சத்து அதிகரித்து வருவதாகக் கேள்வி!

★ தமிழ்சினிமா தரம் கெட்டுப் போனதற்கு காரணம் யார்?

அதை அனுமதிக்கிற மக்களும் தான்...



★ தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். பற்றி உங்களது மதிப்பீடு என்ன?
—எம். உன்னிக்கிருஷ்ணன், சென்னை.5.

இவருக்கும் கருணாநிதியைப் போல் ஊழல் சொட்டை உண்டு. கவர்ச்சித்தொப்பியால் மூடிமறைத்து வருகிறார்.

இறப்புகளில் மட்டும் கவனம் செலுத்துவதை விட அவர்கள் இருக்கும் பொழுதே இந்தக் கவனம் செலுத்தப்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? விக்கல்களுக்கு விமோசனம் சொல்லாமல் வெள்ளி விழாக்களுக்கு விருந்து வைப்பதே அரசின் வாடிக்கையாக இருந்து வருகிறது.

இருப்பவனைக் கவனிக்காமல் அலட்சியப்படுத்தி விட்டு
இறந்த பிறகு
சந்தனக் கட்டையில் எரித்தால் என்ன? அல்லது
சாக்கடை ஓரமாகத் தூக்கிப் போட்டால் என்ன?



என். ஜே. கந்தமாறன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# தலைவலியா?

உடம்பில் தோன்றும் வலிகளுள் மிக மோசமானது தலைவலி. மண்டையைப் பிளப்பது போன்ற பயங்கர வலி;

அறிவியல் கூறும் விளக்கத்தைக் காண்போமா? விழித்திரையில் உள்ள ரத்தக் குழாயில் சீராக அல்லாமல் தற்காலிகமாக அதிக ரத்தம் திணிக்கப் படுவதால் நுண்ணிய ரத்த நாளங்கள் வீங்குகின்றன. அதனால் வலி தோன்றுகிறது.

தலைவலி ஒரு நோயன்று. அது பிறிதோர் நோயின் அறிகுறியே என்பதை மறந்து விடக்கூடாது. உடலில் எந்த பாகத்தில் கோளாறு ஏற்பட்டாலும் முதலில் தோன்றுவது தலைவலியே. நரம்புத்தளர்ச்சி, கண் பார்வைக் கோளாறுகள், மலச்சிக்கல், மிகுந்த கவலை, வாழ்க்கை நெருக்கடிகள் இவைகளால் தலைவலி வருதல் இயற்கையே. வேலை நெருக்கடியில் அச்சத்துடனும், கவலையுடனும் வேலை செய்வதாலும் உடலில் விறைப்பு (TENSION) ஏற்பட்டு ஒற்றைத்தலைவலி (MIGRAINE) உண்டாகிறது.

மண்டை ஓட்டின் கீழும் மூளைக்குள்ளும் கோடிக்கணக்கான சிறு சிறு ரத்த நாளங்கள் சுற்றிப் பின்னிக் கிடக்கின்றன; அவற்றில் ஒரு நிமிடத்தில் பத்து தடவை ரத்த ஓட்டம் மூளையைச் சுற்றுகிறது. அதில் தடங்கல் ஏற்படும் போது தலைவலி தோன்றுகிறது. வேலை நெருக்கடி, கவலை காரணமாகக் கழுத்தின் பின்புற தசை சுருங்கி விட, அங்கே விறைப்பு நிலை ஏற்படுகின்றது. தொடர்ந்து ரத்த ஓட்டத்தில் சுணக்கம்; அதன் விளைவு தலைவலி.

அந்நிலையில் ஆஸ்ப்ரோ, அனாசின், கோடோபைரின், A, P, C போன்ற வலி நிவாரணிகளைப் பயன்படுத்துதல் நல்லதல்ல-வலி ஏதோ குறைவது போல இருந்தாலும் முழு நிவாரணம் கிடைக்காது. ஆஸ்பிரின் வேண்டுமானால் அளவாகச் சாப்பிடலாம். ஏனைய வலி நிவாரணி மாத்திரைகள் நாளடைவில் இதயத்தையும் கருப்பையையும் பாதிக்கின்றன.

FREE E- BOOKS , www.thamizham.net.,

தலைவலி ஏற்பட்டால் முதலில் மலச்சிக்கல், சிறுநீர் பிரிதலில் இடையூறு இல்லாமல் பார்த்துக் கொண்டு, கண்களில் வெளிச்சம் படாமல் ஓய்வு எடுத்துக்கொண்டால் நிச்சயம் வலி ஓரளவு தணியும்.

தலைவலிக்கு உள் மருந்துகளை விட வெளிப்பூச்சு மருந்துகளே நல்லது. யூகலிப்டஸ், கஸ்தூரியா தைலங்கள் கலந்த மருந்துகளைப் புறத்தே தடவித் தேயுங்கள். வேப்பம்பூ, சுக்கு, மிளகு, தனியா நான்கையும் லேசாக வறுத்துப் பின், அவற்றைப் போட்டு, கஷாயம் செய்து சாப்பிடலாம்.

அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சி செய்யலாம். இது ஒன்றே நிரந்தரமான தீர்வாகும். இளமையிலேயே யோகாசனப் பயிற்சி செய்யத் தொடங்கி விட்டால் முதுமையில் இதன் பிடியிலிருந்து தப்பலாம். ஆனால் தலைவலி வந்திருக்கும் போது யோகாசனங்கள் செய்யக் கூடாது.

—கட்டிபாரதி

1914-ஆம் ஆண்டில் போலீஸ் என்ற சொல் ஆங்கில அரசு சொல்லாகமட்டுமே இருந்தது உண்மையில் போலீஸ் என்ற சொல் பிரெஞ்சு சொல்லாகும்.




PROTECTOR OF LIFE IN CIVIL ESTABLISHMENT என்று பொருள்.

போலீஸ்காரர்களுக்கு போலீஸ்காரர்களாலேயே நடத்தப்படும் ஒரு பத்திரிகை மராட்டியத்தில் வெளி வருகிறது. பெயர் தவிதா (பொருள் : உஷார்)

மற்ற நகரங்களை ஒப்பிடுகையில் சென்னை நகரில் உள்ள போலீஸ்காரர்கள் எண்ணிக்கை குறைவு. 567 பேருக்கு ஒரு போலீஸ்காரர் உள்ளார்.

பம்பாயில் 400 பேருக்கு ஒருவரும் பெங்களூரில் 250 பேருக்கு ஒருவரும் கல்கத்தாவில் 260 பேருக்கு ஒருவரும் உள்ளனர்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

## திரையுலகப் பிரமுகர்கள்: இயக்குநர் பீம்சிங் 3



தமிழ்ப்படங்களின், ஒலி, ஒளி பதிவுமுறைகளில் அபார தேர்ச்சிகள் ஏற்படாத காலத்திலேயே இயக்குநர் பீம்சிங் படமெடுத்தார். எனவே அவரது கவனம் அந்தத்துறையில் சிதறாமல், கதையம்சத்திலேயே உறைந்திருந்தது. (கொஞ்சம் விதிவிலக்காக ஒளிப்பதிவில் அவர் கவனம் செலுத்தியது: பாலும் பழமும்) ராஜா ராணி கதைகள், சண்டைகள், மிருகங்கள், மாயாஜாலங்கள் போன்றவற்றைத் தவிர்த்து அன்றாட குடும்ப நிகழ்வுகளைக் கதையாக்கி மாறுதல் செய்தார் பீம்சிங்.

தனக்குக் கைவந்ததும், ஓரளவு 60வதுகளின் திரைப்பட ரசிகர்களுக்கும் நிறைவளிக்கக் கூடியதுமான குடும்பக்கதைகளை-கிட்டத்தட்ட ஒரே மாதிரி கதையம்சம் கொண்டதான கதைகளையே அவர் படமெடுத்தார். பீம்சிங்கின் 35 படங்களின் கதைகளையும் 4 அல்லது 5 கதைச்சுருக்கங்களாக பிழிந்து விட முடியும்

குறிப்பாக குடும்பம் பிரிதல் பின்பு சேர்தல் (பாகப்பிரிவினை, களத்தூர் கண்ணம்மா, படிக்காத மேதை, பொன்னு விளையும் பூமி. பழநி,( கிட்டத்தட்ட பெரும்பாலான கதைகளின் அடிப்படைக் கருவாக இவர் படங்களில் காணப்படுகிறது.

நிலப்பிரபுத்துவ அமைப்பிலிருந்து முதலாளித்துவத்திற்குச் செல்கின்ற போது குடும்பங்கள்-குறிப்பாகக் கூட்டுக் குடும்பங்கள் கட்டுக் கோப்புகள் குலைவது தவிர்க்க முடியாதது. அதைத் திரைப்படத்திலாவது தடுத்து நிறுத்த முயன்றவர் பீம்சிங்! இது நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான் அமைந்தது என்பது புரிகிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இந்தக் குடும்பக் கதைகளுக்கு அடிப்படையாகக் குடும்ப பாசம் பீம்சிங் கதைகளில் முதன்மை வகிக்கும். காதலை விட, சகோதரப்பாசம் பெற்றோர் குழந்தைகள் பாசம், சாதாரண வாழ்வை விட பெருமளவு மிகைப்படுத்திக் காட்டப்படும். பாசமலரில் வரும் ராதா ராஜசேகரின் உடன் பிறப்புகளோ, படிக்காத மேதை ரங்கனோ, மனிதனின் மேலான உணர்ச்சிகளைப் பண்படுத்த உந்துதலாகும் அதீத கற்பனைப் பாத்திரங்கள்!

தனிநபர் பிரச்சனைகளாய் குடும்ப உறவில் ஏற்படும் சிக்கல்கள், தீர்வுகள் என்பதற்கு அப்பால் அவரது பார்வை விரிவடைந்து செல்ல முடியவில்லை. சமூக ரீதியான பார்வைக்கோ, சித்தாந்த ரீதியான மனப்போராட்டத்திற்கோ, அரசியல் வகைப்பட்ட பிரச்சனைக்கோ இவர் படத்தில் இடம் இல்லை. பிரச்சனைகளின் கருவை இவர் படங்கள் அறிந்ததில்லை.

நல்லவர் கெட்டவர்-இருவரும் கதைகளில்நேரடியாக இருவேறு எல்லைகளில் சித்தரிக்கப்படுவார்கள். நடுத்தர குணமுடைய வாழ்வில் தினமும் சந்திக்கக் கூடிய எதார்த்த மனிதர்கள் பீம்சிங் கதைகளில் அபூர்வ மனிதர்களே.



படம் பார்ப்போரின் சிந்தனையை விட பீம்சிங் உணர்ச்சிகளுக்கே இடம் கொடுக்க முயன்றிருக்கிறார். இதற்காக பாடல்களிலும் வசனங்களிலும் தனக்கு முழு திருப்தி ஏற்படும் வரை நிறைவடைய மாட்டார். பல உத்திகளைக் கையாள்வார்.



FREE E- BOOKS , www.thamizham.net.,

பீம்சிங் படத்தின் வசனம் யார் எழுதுவதாக திரையில் போட்டாலும், 4 அல்லது 5 பிரபல திரைகதை வசன கர்த்தாக்களை நியமித்து முக்கிய இடங்களை எழுதி வரச் சொல்வார். அதில் மிகச் சிறந்ததைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்வார். எழுதியவர் பெயர் படத்தில் வெளிவராது. ஆனால் பணம் தந்து விடுவார். பீம்சிங்கிற்காக இந்த பிரபல திரை எழுத்தாளர்கள், தங்கள் கை வண்ணத்தைக் காட்டி, விளம்பரமின்றி உழைத்திருக்கிறார்கள். 'பாவ மன்னிப்பு' படத்தின் முக்கிய காட்சியொன்றில் "அள்ளி முடித்த கூந்தலுக்கென்று கிள்ளி வந்த மல்லிகைப்பூ" என்று தொடரும் வசனத்தை எழுதிய மர்மக் கை கண்ணதாசனுடையது! அதே மாதிரி பதிபக்தி படத்தின் உச்சகட்ட வசனம் அரங்கண்ணல் எழுதியது. பழனி படத்தின் சில உருக்கமான வரிகளுக்குச் சொந்தக்காரர் வலம்புரி சோமநாதன். அதே மாதிரி இனிமையான பாடல்கள் சரியான சந்தர்ப்பத்தில் இடம்பெற பீம்சிங் காத்திருப்பார். "அத்தான் என் அத்தான்" என்ற பாட்டு பாசமலர் படத்திற்காக மிக இனிமையாக அமைந்தது. ஆனால் படச் சூழலுக்குப் பொருந்தி வரவில்லை. எனவே அப்படத்திலிருந்து அப்பாடலை பீம்சிங் நீக்கிபத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு, காத்திருந்தார். பாவமன்னிப்பு படத்தில் இந்தப் பாடலைச் சரியான இடத்தில் பொருத்தினார். "மயங்குகிறாள் ஒரு மாது" என்ற, வெறொரு இனிமையான புதுப்பாடல் பாசமலரில் அந்த இடத்தில் அமைக்கப்பட்டது.

படக்காட்சிகளைச் சேர்த்து முடிப்பதில் பீம்சிங்கின் தேர்ச்சி பற்றி இன்றும் படவுலகில் பேசுகிறது. எவ்வளவு சிரமப்பட்டு காட்சிகளை எடுத்தாலும் காட்சிக்குக் காட்சி பொருந்தி, அவை குன்றாது வராவிடில் தயவு தாட்சணியமின்றி வெட்டி எறிந்து விடுவாராம். பீம்சிங் படங்கள் ஒரளவு சோர்வு தட்டாமல், எங்கும் சிக்காமல் நேரே நகர்ந்து செல்வதற்கு அவரது இந்த "எடிட்டிங்" திறமையே காரணம். எடிட்டராக துறையில் நுழைந்து இயக்குநராக மாறியவரல்லவா? பீம்சிங் படத்தின் ஜீவன நேரடியாக, அநாவசியமின்றி கதை சொல்லும் முறை தான்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# காது நன்றாகக் கேட்கவேண்டுமா?

காது மந்தத்தன்மை மிகவும் மோசமாகும் வரை காத்திருக்கிறீர்கள். நாங்கள் உதவி செய்ய காத்திருக்கிறோம்.

**இயர் எய்ட்ஸ்**

4, வடக்கு உஸ்மான் ரோடு,
தி. நகர், சென்னை-600 017.





## யார் வீட்டில் வளர்ப்பது?

வீட்டுக்கு ஒருமரம்
வளர்க்கச் சொல்லுகிறீர்களே!
யார் வீட்டில் வளர்ப்பது?
இனியாவது...
அடுத்தவர் வீட்டில் வளர்ப்பதற்கு
அனுமதி வாங்கித்தாருங்கள்!
இல்லையேல்..
பட்டா கொடுத்து விட்டு—பிறகு
சொல்லுங்கள்!

—வீர. ஆறுமுகம்

## சூரியன்



பூமியில்
விடிவைக்காண
நிதம் வந்து
சோர்ந்து போகும்
பொதுமை வாதி

—விவேகன்

## வரி

இளைத்துப் போன
எங்களின்
நிர்வாண தேகத்தில்
நிதானமாக ஏற்றப்படும்
விஷ ஊசிகள்.

—அ. செல்வமணி

பீம்சிங்கின் படங்கள் 70வதுகளின் கவர்ச்சிப்படங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு ஓட முடியாதபோது, தன் வழக்கமான உயர் பண்பு நலன் பாணியைத் தளர்த்திக் கொண்டு, மற்றவர்களைப் போல கவர்ச்சி காட்சிகளும் கொச்சை வசனங்களும் கொஞ்சம் அறிமுகப்படுத்திக் கொண்டு காசு பண்ணத் தயக்கம் காட்டினார். மனிதனின் பலவீனமான, கீழான உணர்ச்சிக்குத் தீனி போடாமல் கடைசிவரை நின்று படமெடுத்தார் பீம்சிங்.

(அடுத்த இதழில் முடியும்)

FREE E- BOOKS , www.thamizham.net.,

மாதந்தோறும் படைப்புகளின் முகப்போலியம் தாங்கி வெளிவரும் முற்போக்கு இலக்கிய மாத இதழ்—பதினைந்து மாதங்களாக தொடர்ந்து வெளிவருகிறது.
விலை 50காசு. — ஆண்டு சந்தா ரூ 6/-
விற்பனையாளர்கள் தேவை—
நிர்வாகி, எண் : 18, 68வது தெரு,
11வது பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-600 078.

படித்தீர்களா!
**முகம்**

**மிக மலிவான விலையில் எவர்சில்வர், அலுமினியம், பித்தளை, பாத்திரங்கள் வாங்க.**

# சரவணா ஸ்டோர்ஸ்

13, ரெங்கநாதன் தெரு, தி.நகர்
(மாம்பலம் இரயில் நிலையம் அருகில்)
போன் : 446078.

## என்ன ஆச்சரியம்!

**உங்கள் வீடுகளுக்கு வர 20 சித்த மருத்துவர்கள் காத்திருக்கிறார்கள்!
உங்கள் அழைப்பை எதிர்பார்த்திருக்கிறார்கள்!**

ஆம்! எந்த நோயையும் இருந்த இடம் தெரியாமல் விரட்டி அடிக்கும் 20 சித்த மருத்துவ நூல்களின் அணிவகுப்பைத்தான் சொல்கிறோம். வைத்தியச் சித்தர் கே.எஸ். லட்சுமணன் உருவாக்கியவை. பழம் பெரும் ஏடுகள் பலவற்றை ஆராய்ந்து பல நூல்களோடு ஒப்புநோக்கி, புத்தகப் பதிப்பு வித்தகர் புலவர் நாகசண்முகம் பதிப்பித்தவை. பாருங்களேன் அவற்றின் பட்டியலை.

1. தேனின் மருத்துவ குணங்கள் 2. நோய் நீக்கும் கீரைகள் 3. நோய் நீக்கும் பழங்கள் 4. நோய் நீக்கும் பூக்கள் 5. எலுமிச்சை வைத்தியம் 6. வெங்காய வைத்தியம் 7. வெள்ளைப் பூண்டு வைத்தியம் 8. வைட்டமின் காய்கறிகள் 9. தாதுவிருத்திக்குத் தன்னிகரற்ற மருந்துகள் 10. தலைவலி வயிற்றுவலி நீங்கத் தன்னிகரற்ற மருந்துகள் 11. இருமல் ஜலதோஷ நிவாரண மருந்துகள் 12. சர்மரோக நிவாரண மருந்துகள் 13. மூல ரோக நிவாரண மருந்துகள் 14. வாயுத் தொல்லை நீங்க வகையான மருந்துகள் 15. விஷங்களை நீக்கும் வீரிய மருந்துகள் 16. கர்பிணிகளுக்குக் கண் கண்ட மருந்துகள் 17. குழந்தை நோய்களும் மருந்துகளும் 18. பல் நோய் மருந்துகள் 19. மாமிச உணவின் மருத்துவ குணங்கள் 20. தொந்தியைக் கரைப்பது எப்படி.

நூல் ஒவ்வொன்றின் விலை ரூ. 3.00

தேவையான நூல்களை வி.பி.பியில் பெற எழுதுங்கள். இருபது நூல்களுக்கும் ரூ. 60 முன்பணம் அனுப்புவோருக்கு தபால் செலவு இலவசம்

## தமிழ்நாடு பதிப்பகம்

36/3 சரோஜினி தெரு, தியாகராய நகர் சென்னை 600 017.

FREE E- BOOKS , www.thamizham.net.,

**சுட்டி சந்தா விபரம்:**

- சுட்டி ஒவ்வொரு மாதமும் தவறாமல் முதல் தேதி வெளிவருகிறது.
- 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00 மட்டுமே.
- எல்லாத் தொடர்புகளுக்கும்: ஆசிரியர் குழு, சுட்டி, அண்ணாநகர், சென்னை-600 040.

**சுட்டி முன் இதழ்கள்:**

இதழ் எண்கள் 1 முதல் 7, 19, 21, 22 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 35 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O) அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டி விற்பனையாளர்கள்**

சுட்டி இன்னும் விற்பனையாகாத எல்லா இடங்களிலும் தேவை. எளிய விதிமுறைகள்; தரமான கமிஷன்; சுட்டியின் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட வாசகர்களுக்கு முன்னுரிமையுண்டு.

**சுட்டி இலவசம்:**

சுட்டியைப் படிக்காத நண்பர்கள் இருப்பின் அவர்களுக்குச் சுட்டியை எங்கள் செலவில் இலவசமாக அறிமுகப்படுத்தலாமே! சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவர் எனில், அவர் முகவரியைத் தாருங்கள். உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் அவருக்குக் கிடைக்கச் செய்கிறோம்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

**சுட்டியில் விளம்பரம்**

செய்து பயனடையுங்களேன். மாதந்தோறும் பல்லாயிரக்கணக்கான விழிப்பான வாசகர்கள் சுட்டியைப் பார்க்கிறார்கள்; பரிமாறுகிறார்கள்; விவாதிக்கிறார்கள். பலரும் பாதுகாக்கிறார்கள். நல்ல விளம்பரங்களுக்கு உரிய பத்திரிகை சுட்டி!

சுட்டியில் மலிவு வரி விளம்பரமும் செய்யலாம். வரி விளம்பரங்களுக்குக் கட்டணம் வரிக்கு ரூ5 -மட்டுமே.

✳ மது, சிகரெட்டு, பெண்களைப் போகப் பொருளாகக் காட்டி விற்பனை செய்யும் கவர்ச்சி விளம்பரங்கள் போன்றவை சுட்டியின் வெளி இடுவதற்கில்லை.

**சுட்டி இம்மாதம் வந்து சேரவில்லையா?**

ஒவ்வொரு மாதமும் முதல் தேதிக்குள் கிடைக்குமாறு சந்தாதாரர்களுக்கு சுட்டி அனுப்பப்படுகிறது. சந்தா முடிய ஒரு மாதம் முன்பும், சந்தா முடியும் மாதமும் (உடன் பணவிடை தாளும் இணைக்கிறோம்) அஞ்சல் உறையில் மேல் உங்களுக்கு அறிவிப்புச் சீட்டு ஒட்டப்படுவதைக் [illegible] மறவாதீர்கள். அப்படியும் சந்தா அனுப்புவோர்க்கே சுட்டியை நிறுத்த நேர்கிறது.

சந்தா முடிய காலமிருந்தும் 15 தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெறாதவர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒருமுறை அனுப்புகிறோம். சில சமயம் அஞ்சலில் தவறுவது என்ன நடவடிக்கை எடுத்தும் தவிர்க்க முடியாதிருக்கிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

மதுரையில்

# ஊறுகாய்த் தொழிலின் பின்னணி

குடிசைத் தொழில்களாக எளிய முறையில் தயாரிக்கப் படும் சோப் வகைகள், சர்பத் வகைகள், ஊறுகாய்த்தொழில் இவைகளில் அதிக லாபமும், குறைந்த செய்முறையும் உள்ளது இந்த ஊறுகாய்த் தொழில் தான். ஆனால் இந்த ஊறுகாய்த் தொழிலில் உள்ள பின்னணிகளை ஆராய்ந்து பார்த்த பொழுது சுகாதாரக் கேடும், வெட்கக் கேடான விஷயங்களுமே மிஞ்சியது. மதுரையில் உள்ள பிரபல ஊறுகாய்க கம்பெனிகளைத் தவிர்த்து, 48 குடிசைத்தொழில் களில் தயாரிக்கும் இத்தொழிலின் பின்னணி இது தான். சர்பத் கடைகளில் எலுமிச்சம்பழத்தைச் சாறு எடுத்து விட்டு போடப்படுகின்ற எலுமிச்சம் பழத் தோல்களையும், ஜூஸ் கடைகளிலுள்ள ஆரஞ்சுப்பழத்தோல்களையும், இத்தொழில் களைச்செய்பவர்களில் குறிப்பிட்ட ஒரு சிலர் அக்கடைக்குச் சென்று பேரம் பேசி, வாங்கி நாலைந்து சிறுவர்களைக் கொண்டு மலிவான விலையில் கிடைக்கும் மிளகாய் வத்தலையும், அல்லது முழுசான பச்சை மிளகாயுடன் சேர்த்து (சாதாரணத் தரையில்) அரைத்து, ஜவுளிகள் வருகின்ற கண்ணாடித் தாள்களில், இந்த முறையில் தயாரிக்கப்பட்ட ஊறுகாய்களைப் பாக்கட் செய்து மார்க் கெட்டிற்கு வந்து விடுகிறது. இதன் மூலம் இவர்களுக்கு செலவைவிட ஐந்து மடங்கு லாபம் வருகிறது. இத்தொழிலில் ஈடுபடும் சிறுவர், சிறுமியர்க்கு நாள் கூலியாக 1½ ரூபாயி லிருந்து 2 ரூபாய் வரை தரப்படுகிறது. ஆனால் இவர்கள் ஒரு நாளைக்கு 18 மணி நேரம் 1500 பாக்கட்களை நிரப்ப வேண்டும் அல்லது 10 கிலோ எலுமிச்சை, ஆரஞ்சுப்பழத் தோல்களை அரைக்க வேண்டும். இம்மாதிரி ஊறுகாய்த் தயாரிப்பினால் சில சமயம் பாக்கட்டுகளில் தலைமுடி, சிறிய கரப்பான் பூச்சிகள், தீப்பெட்டிக்குச்சிகள் காணப் படுவதுண்டு. ஊறுகாய்த் தொழில் சுகாதார முறையில் இயங்குகின்றதா என்பது பற்றி மதுரையில் யாருக்குமே பொதுவாக அக்கறையில்லை.

—ஓ. எஸ். பாலகிருஷ்ணன்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

## வாசகர் குமுறல்

### 'பஞ்சாயத்து மருத்துவமனை செயல்கள்'

ஜோலார்ப்பேட்டை (வ.ஆ)யில் உள்ள பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனையில் நோயாளிகளைச் சரிவர கவனிப்பதில்லை. பணிநேரத்தில் கதை புத்தகம், படித்துக் கொண்டும், உடன் பணிபுரியும் ஊழியருடன் சினிமா கதை பேசிக்கொண்டும் இருக்கிறார்கள். தான் விரும்பிய நேரத்தில் நோயாளிகளை கவனிக்கிறார்கள். காயங்களின் கட்டுகளை பிரிக்கும் பொழுது வேண்டா வெறுப்பாக காட்டு மிராண்டித்தனமாக செய்வதால் ஆறிவரும் காயங்களும் அதிகமாகி நோயளிகள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த மருத்துவனை அருகில் உள்ள கழிவிடம் சுத்தம் செய்யாமல் இருப்பதால் நோய் பரவ காரணமாய் உள்ளது. சுகாதாரத்தைக் கடை பிடிக்க வேண்டிய மருத்துவமனை இப்படியிருப்பது வருந்ததக்கதாகும். இவை சம்பந்தப்பட்டவர்களால் கவனிக்கப்பட்டால் பொதுமக்கள் நலம் பெறுவர்.

—மறுமலர்ச்சிப்பித்தன்

## ஓய்வு பெற்ற என் தந்தை...

என் தந்தை ஓய்வு பெற்ற ஆசிரியர். R. V. கஸ்தூரி ஆரம்பப்பள்ளி, சிவலிங்கபுரம், இராஜபாளையம்-சரகம், விருதுநகர்-கல்வி மாவட்டம். T.P.F No. 3327 (கோவில் பட்டி H.O. No. 830264) 31-5-71ல் ஓய்வு பெற்ற ஆசிரியர் 17-12-84ல் இறந்து போனார். என் தந்தைக்கு வரவேண்டிய சம்பள பாக்கி பணம் ஏதோ வந்திருக்கிறது ; அதற்காக அந்தப்பள்ளி நிர்வாகி லஞ்சம் கேட்கிறார். பணத்தை M.O மூலம் என் தாய்க்கு அனுப்ப நிர்வாகி மறுக்கிறார். M.O மூலம் முழுப்பணத்தையும் என் தாய்க்கு கிடைக்க கல்வி இலாகா உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

—R. புவனேந்திரன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## ஒவ்வொருவருக்கும் வேலை வாய்ப்பு!

நான் திருச்சிராப்பள்ளி மாவட்ட வேலை வாயபபு அலுவலகத்தில் 81ம் ஆண்டு தட்டச்சருக்காக பதிவு செய்துள்ளேன். 1976 ஆம் ஆண்டு எஸ்.எஸ்.எல்.ஸி தகுதியின் அடிப்படையில் பொதுவாகப் பதிவு செய்திருந்தேன். அப்பொழுது ஒரு நேர்முகத் தேர்வுக்குக்கூட அழைக்கவில்லை. 1976 ஆம் ஆண்டு என்னுடன் பதிவு செய்தவர் இப்பொழுது நில அளவையாளராகப் பணிபுரிகின்றார். நானோ இன்னும் வேலை தேடி அலைகின்றேன். கூடுதலாக தட்டச்சு பதிவு செய்ததால் தட்டச்சுப் பதவிக்கு மட்டும் தான் நேர்காணல் அட்டை அனுப்புகிறார்கள். வேறு எந்தப் பதவிக்கும் நேர்முக தேர்விற்கு எங்களை அழைப்பதில்லை. நான் ஏறத்தாழ 20 இண்டர்வியூ சென்றுள்ளேன். ஒன்றும் பதிலில்லை. சாதாரணமாகபபணி 15 தினங்களாக இருந்தாலும் அதற்கு ஒரு நேர்முகத் தேர்வு நடத்துகிறார்கள். பணி காலியாக உள்ள இடத்திற்கு மாவட்ட வேலை வாய்ப்பு எண் வரிசைப்படி ஒவ்வொருவருக்கும் வாய்ப்புக் கொடுத்தால் என்ன? — P. வீரமணி


ம. பொ. சி

விடுதலைப்போரில் தமிழகம் (இருதொகுதிகள்) — 100-00

பாரதியார் பற்றி ம. பொ. சி பேருரை — 36-00

விடுதலைக்குப்பின் தமிழ் வளர்ந்த வரலாறு — 14-00

பழநிபாரதி

நெருப்புப் பார்வைகள் — 5-00

யோகி. என் ராஜன்

எல்லோரும் பழக எளிதான யோகாசனம் 14 — 6-00

கூ. புகழேந்திரன் பி ஏ.

ஊராட்சிகள் பேரூராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தல் விதிகள் — 6-00

Dr கே. என் ராஜன்

தொழில் சார்பு நுரையீரல் நோய்கள் — 10-50

ஆர். பெருமாள் பி. ஏ.

கால்நடை வளர்ப்பில் புதிய முறைகள் — 18-00

55 பயிர்வகைகளின் புதிய சாகுபடி முறைகள் — 20-00

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஆஸ்துமா-ஈஸ்னோபீலியா பற்றி

ஆஸ்துமா எவ்வாறு ஏற்படுகிறது? நம் உடலிலுள்ள சிறுநீரகங்கள் இரத்தத்திலுள்ள கழிவுநீரைப் பிரித்து வெளியேற்றுகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததேயாகும். சிலருக்கு சில நேரங்களில், சிறு நீரகங்களில் வடிகட்டும் பகுதியில் உப்புப் படிவங்கள் படிவதினாலோ, கழிவுப் பொருட்கள் அடைப்பு ஏற்படுவதினாலோ, உணவு வகை, சீதோஷ்ண நிலை மாற்றத்தால் உடலில் ஏற்படும் குளிர்ச்சித் தன்மையால் சுருக்கம் ஏற்படுவதினாலோ. கழிவு நீர் முறைப் படி முழுவதும் இரத்தத்திலிருந்து பிரிக்கப்பட முடியாமல் இரத்தத்திலேயே ஓரளவு கலந்து இருந்து விடுகிறது. அடுத்தாற்போல் இரத்தம் மார்புப் பகுதியில் உள்ள நுரையீரலில் சுரக்கும் நீருடன் கலந்து சுத்தப்படுத்தப் படுகிறது.

சுத்தப்படுத்தப்படும்போது பிரிக்கப்படும் கழிவுநீர் தும்மல் மூலம் மூக்கில் நீராக வெளியேறுகின்றது. இந்நீர் இறுகி மூக்கடைப்பு ஏற்படுகிறது. மூக்குச் சிந்தும் போது இது மூக்குச்சளியாக வெளியேறுகிறது. இறுகிய கழிவு நீரே இரும்பலின் போது கோழையாக வெளியாகிறது. இம்முறைகளில வெளியேற்றப்படாத எஞ்சிய கழிவு நீரே நுரையீரல் பகுதியில் படிந்து விடும் கபம் எனப்படுவதாகும். இதன் காரணமாகவே தொடர்ந்து ஜலதோஷம், மூச்சுத் திணரல், மூக்கடைப்பு, மூக்கில் நீர்வடிதல், தும்மல், இருமல், கபம், பீனிசம் (Sinus) மூச்சு வாங்குதல் போன்றவை ஏற்படுகின்றன. இத்தகையோர் அனைவரும் ஆஸ்துமாவிற்கோ-ஈஸ்னோபீலியாவிற்கோ தொடர்புள்ளவர்களாக ஆகின்றனர் எனக் கொள்ளலாம்.

ஆஸ்துமா, ஈஸ்னோபீலியோ-வை குணப்படுத்தும் முறை என்ன? சிறுநீரகங்கள் (Kidneys) சீராக செயல்படச் செய்திட, பக்க விளைவு ஏற்படுத்தாத தக்க மூலிகை மருந்தை உட்கொள்ள வேண்டும். சிறுநீரகங்களில் உள்ள வடிகட்டும் நுண்வலை நரம்புகளை விரைவில் சரிசெய்ய விசேஷ அனல் சிகிச்சை (SounaBath with Herbal Oil) முறையை செய்து கொள்ளவேண்டும்

மேலும் ஆலோசனைக்கு:

சித்தஞானி - ஞானோதய வைத்தியர்,

**Dr. C. K. மாணிக்கவாசகம்,**

**செலந்தம்பள்ளி P.O. (N.A.Dt.) 635653**


FREE E- BOOKS , www.thamizham.net.,

# எந்த ஐயத்திற்கும் பதில்

சுட்டி பதிலளித்த சில கேள்விகள்?

- ✳ நான் எந்த மதத்தையும், சாதியையும் சாராமல் இருக்க முடியுமா? சட்டப் பூர்வமான விளக்கம் சொல்லுங்கள்.
- ✳ பியர்லஸ்ஸில் பணம் கட்டுவது பாதுகாப்பானதா?
- ✳ 2 ஆண்டுகளாக மலச்சிக்கலால் அவதிப்படுகிறேன். தீர்க்க வழி சொல்லுங்கள்.
- ✳ SITUATIONAL ENGLISH—by Longman — இப்புத்தகம் எங்குக் கிடைக்கும்?
- ✳ தூக்கத்தில் தினம் விந்து வெளிப்படுகிறது. இது ஆபத்தானதா?
- ✳ நான் ஒரு தொழுநோயாளியைத் தொட்டேன். தீங்கு நேருமா?
- ✳ புதிய மாத இதழ் தொடங்கும் வழி முறைகள் என்ன?
- ✳ வெளிநாட்டிலிருந்து ஓர் இயந்திரம் தருவிக்க வேண்டும். அதன் வழிமுறைகள் பற்றி விளக்கம் தாருங்கள்.

இது போல உங்கள் ஐயம் எதைப்பற்றியாயினும் இரண்டே ரூபாய் செலவில், பதில் பெறுங்கள். அந்தத்துறை நிபுணர்களிடமிருந்து பதில் பெற்று உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம்.

கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 வீதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள்.

"சுட்டி பதிலாளர்குழு" 1494, அண்ணாநகர், சென்னை-600 040.

---

## ஸ்கிரீன் பிரிண்டிங்

குறைந்த முதலீட்டில் மாதம் ரூ 500 முதல் 5000 வரை சம்பாதிக்கலாம். இயந்திரங்கள் கிடையாது. மின்சாரம் கிடையாது. கைகளினாலேயே அழகாக அச்சிடலாம். 40க்கும் மேற்பட்ட விளக்கப் படங்களுடன் விலை ரூ12-00.

| | |
|---|---|
| ரெஃப்ரிஜிரேஷன் AND ஏர்கண்டிஷனிங் | 12-00 |
| ஸ்டீரியோ ஆம்ப்ளிபயர் மெக்கானிசம் | 14-00 |
| பைலட் ரேடியோ ரிப்பேரிங் | 6-00 |

தபால் செலவு தனி

### பைலட் பப்ளிகேஷன்ஸ்

தபால் பெட்டி எண் 1545,
309, லிங்கி செட்டித்தெரு, சென்னை-600 001.

சிதம்பரம்

FREE E- BOOKS , www.thamizham.net.,

சந்தடியில்லாமல்

# தேர்தல் நடத்த முடியும்!

சென்ற மாதம் முதல் வாரத்தில் ஜெர்மன் சமஷ்டி பார்லி மெண்டுக்குப் பொதுத் தேர்தல் நடந்தது. அப்போது நான் ஜெர்மன் தலைநகரான (Boon) பான் நகரில் இருந்தேன்.

தேர்தலுக்கு இன்னும் 2 வாரங்களே இருந்தன. ஆனால் தேர்தல் பற்றிய பரபரப்பு எதையும் காணவில்லை. இந்தியாவில் தேர்தல் காலத்தில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களைக் கண்டுள்ள எனக்கு, இது பெரும் ஆச்சரியமாக இருந்தது.

தேர்தல் போட்டி மிகத் தீவிரமாக இருந்த போதிலும், நகரவாசிகள் அக்கறையே இல்லாதது போல் அமைதியாக இருந்தனர். தேர்தல் முழக்கங்கள், "சூடான விவாதங்கள்" ஆகியவை எதுவும் தலைநகரில் மட்டுமல்ல; ஜெர்மனியின் எந்த நகரத்திலும் இல்லை. எங்காவது சில இடங்களில் எதிரெதிர் தேர்தல் போட்டியாளர்களின் புகைப்படங்கள் பெரிய அளவில் ஒட்டப்பட்டிருக்கும்; அவ்வளவு தான்!

நாங்கள் சுற்றி வந்த 12 நகரங்களில் மொத்தம் 12 சுவரொட்டிகளுக்கு மேல் இல்லை. இந்தியாவில் தேர்தல் சமயத்தில் காணப்படும் கடும் கெடுபிடி, பூசல், போட்டி, ஆர்ப்பாட்டம் போன்ற சூழ்நிலை காணப்படவேயில்லை.

சுவரில் கிறுக்கிய கோசங்களோ, சுவரிலும், பஸ்களிலும் ஒட்டப்பட்ட போஸ்டர்களோ, கொடிகளோ, ஒலி பெருக்கி பொருத்தப்பட்ட ஆட்டோ, டாக்ஸிகளோ, தெரு முனைக் கூட்டங்களோ, கூட்டங்கள் ஆரம்பிக்கும் முன் சினிமாப் பாட்டுக்களோ, வேறு எந்த சத்தமோ எதுவுமே இல்லை.

வேட்பாளர்கள் வாக்குறுதிகளை அள்ளி வீசிக் கொண்டு அரசியலில் நாம் முதிர்ச்சி பெறவில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம். தேர்தல் பிரசாரம் என்பது இந்தியாவில் ஒரு பெரும் தெருக் கூத்தாகவே நடக்கிறது

திடீர் தேர்தல் பிரகடனங்கள் வெளியிட்டுக் கொண்டு இருக்கவில்லை.

➡

FREE E- BOOKS , www.thamizham.net.,

# எமக்கு வந்தவை

*தோற்றுப் போன மார்க்சியம்:* ஆசிரியர்: ஹோ. வே. சேசாத்ரி
வெளியிடுவோர்: புத்தொளிப் பதிப்பகம், 36, சுவாமி நாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.600 002 விலை: 75 காசுகள்

*காணிக்கை:* (நான்கு ஓரங்க நாடகங்கள்)
ஆசிரியர்: மதுரைஜேஸன், வெளியீடு: எஸென்சியல் பப்ளிகேஷன்ஸ். 1719.C, திருச்சிப்பாதை, கோயம்புத்தூர்.641 045. விலை: ரூ. 5.00

*கிழக்கை கிழிக்கும் மேற்கு:* (புதுக்கவிதைகள் தொகுப்பு)
ஆசிரியர்: பழ இராதாக் கண்ணன். வெளியீடு: பிம்பம், 4, புதுடபீர் தெரு, கும்பகோணம். விலை: ரூ. 1.25

*பூபாள ராகங்கள்:* (கவிதைத் தொகுப்பு)
தொகுப்பு முகவரி: பூபாள ராகங்கள், காட்டு வளவு, திருப்பூர்.638 604. விலை: 30 காசு

*தீக்குளிக்கும் சீதைகள்:* (புதுக்கவிதை, சிறுகதைகள் தொகுப்பு)
ஆசிரியர்: கு. கருணாநிதி, தொடர்பு முகவரி: விடியல் பூங்கா, செ. புதுப்பாளையம் (P.O.) சேலம்.637 212. விலை: ரூ. 1.00

*புது அத்தியாயம்:* (கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: இரா. தமிழரசி, தொடர்பு முகவரி: M. D. ஜான் கென்னடி, கல்வாரி சர்ச் காம்பவுண்டு, வாணியம்பாடி ரோடு, திருப்பத்தூர், வ ஆ.635 601. விலை: 50 காசுகள்

*மரவழிபாடு-திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு:* (ஆய்வு நூல்கள்)
ஆசிரியர்: டாக்டர். க. ப. அறவாணன்.
கிடைக்குமிடம்: பாரி நிலையம். 184, பிராட்வே, சென்னை.600 108. விலை: ரூ. 12/-

*ஒரிரு கூட்டங்கள் தவிர மற்ற தேர்தல் கூட்டங்கள் எல்லாம் கட்டிடங்களுக்கு உள்ளே நிகழ்ந்தன.*

*தேர்தல் நாளில் 90 சதவிகிதத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்குப் பதிவு செய்ய வந்தனர். ஜெர்மனி முழுவதும் அதே அளவு வாக்குப் பதிவுகள் நிகழ்ந்தன.*

*கட்சிகளைப் பற்றியோ வேலைத் திட்டங்கள் பற்றியோ தெரிந்து கொள்ள விரும்பும் வோட்டர்கள் பத்திரிகை மூலமும் டெலிவிஷன் மூலமுமே தெரிந்து கொள்கிறார்கள்.*

*சமூகத்துக்கும், நாட்டுக்கும், தமக்கும் எது நல்லது என்பதைத் தீர ஆராய்ந்த பிறகே அவர்கள் வோட்டுப் போடுகின்றனர்.*

● தினமணியில் கமர் கவுல்

FREE E- BOOKS , www.thamizham.net.,




ஆசிரியர்: நிர்மலா சுந்தர். வெளியிடுபவர்: வி. ராமச்சந்திரன், 1494-அண்ணா நகர், சென்னை-600 040.
அச்சிட்டோர்: ஜே. எஸ். சிட்ராஜ், இருஷா பிரிண்டர்ஸ், 96, மாமி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

FREE E- BOOKS , www.thamizham.net.,

Regd. No. TN/MS(?)/317

Licence to post ... in prepayment ... TN/MS ...-89



# Sakthi Sugars Limited

## A PACESETTER ...

SAKTHI SUGARS has ... breakthrough in sugarcane ... the farmers have achieved ... increase ... from 28 tonnes per acre ...

SAKTHI SUGARS has ... by distribut... thousand ...

SAKTHI SUGARS ... development ... of Technology ...


... Office: ... Race Course Road, ...

... Coimbatore ...

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஆ: மாத இதழ் 1, மே 1984 Regd. No. TN/MS(N)/317
...d to post without prepayment Licence No. TN/MS(N)WPP-58

http://www.thamizham.net FREE E-BOOKS TAMIL

# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane oduction with innovative technology and the farmers have achieved uccessive Increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes earn an additional Income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribut g over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand mers (a bulk of Whom are small and marginal farmers) and generating inful rural employment to over fifty thousand families in the primary, condary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pro ammes (I) Sakthi High School Provides a conducive environment for dy and development of rural children. (II) Sakthi Institute of Techno gy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam spital provides medical care for the region.

ad Office:
-A, Race Course Road,
imbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E- BOOKS , www.thamizham.net.,